இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை - 2024

--

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையின் (''சபை'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடனான தகவல்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காண்பித்துள்ள விடயங்களிலான தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காண்பித்துள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கதயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. அடிப்படையினை பயன்படுத்துதல்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது பிரகாரம்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	**முகாமைத்துவ கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 53 பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடும் அனைத்து புள்ளிவிபர தகவல்களுக்காக முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான தகவல்ககளை வெளிப்படுத்த	எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

	வேண்டிய போதும் சபையினால் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள கூற்றிற்காக ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.		
(ஆ)	முன்னைய காலப்பகுதியின் தவறுகளை சரி செய்யும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 47 பந்தியின் பிரகாரம் தவறு இடம் பெற்ற காலப் பகுதிக்கான ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களை மீண்டும் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும் சபையினால் முன்னைய காலப்பகுதிக்குரிய கூட்டுத்தொகை ரூபா 1,804,837 ஆன தவறு சரி செய்தலுக்காக ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களை மீள் வெளிப்படுத்தியிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் தவறுகளை சரி செய்யும் போது ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களை மீண்டும் வெளிப்படுத்த வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 50 பந்தியின் பிரகாரம் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் வகுப்புகளாக வெவ் வேறாக காண்பிக்கப்படாது அனைத்து நிலையான சொத்துக்களையும் 03 வகைகளுக்கு பிரித்து கிரயம் பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 378,525,874 இனை மற்றும் திரண்ட பெறமானத் தேய்வு பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 35,252,172 ஆக குறிப்பொன்று மூலம் வெளிப்படுத்தியிருந்தது.	எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் அனைத்து நிலையான சொத்துக்களை வகுப்புகளாக வெவ் வேறாக வெளிப்படுத்த வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 92 (ஆ) பந்தியின் பிரகாரம் கிரயம் ரூபா 80,295,434 தொகையான முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட போதும் தொடர்ந்தும் பயன்படுத்தும் 394 சொத்து உருப்படிகளின் மொத்த தேறிய பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்ததியிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இந்த சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிகைக எடுக்ககப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் பெறுமானத் தேய்விடப்பட்ட எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தும் சொத்துக்களில் மொத்த தேறிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டினுள் திறைசேரியிலிருந்து கிடைத்த	எதிர்காலத்தில் வருமானம் கணிப்பிடும்	நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது

மானியம் ரூபா 57,140,146 தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் ஆண்டில் பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களினால் கிடைத்த வருமானமாக இனங்காணாது தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனமாக குறிப்பிடப்பட்டிருந்தது.	போது நியம இலக்கம் 11 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் திறைசேரி மானியம் வருமானமாக இனங்காண வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்னுள் மாற்றிக் கொண்டிருந்த ரூபா 116,000,000 தொகையான கோரக்கை வைப்பிற்காக வைப்பு திகதி முதல் மாற்றப்பட்ட திகதி வரை காலப் பகுதிக்குரியதாக (2022 முதல் 2024) ரூபா 12,179,183 ஆன வட்டி வருமானத்தினால் கடந்த ஆண்டிற்குரிய வட்டி அளவை திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்ய வேண்டிய போதும் மொத்த வட்டி வருமானத்தையும் நிதி செயலாற்றல் கூற்றிற்கு சீராக்கம் செய்திருந்தது. மேலும், ரூபா 30,489,000 ஆன கோரிக்கை வைப்பொன்றில் வட்டி வருமானமான ரூபா 1,906,390 இனை நிதிக்கூற்றுக்களிற்கு இனங்கண்டிருக்காத காரணத்தால் மீளாய்வாண்டில் வட்டி வருமானத்தை அந்த அளவிவால் குறைத்து கணக்கீடு செய்திருந்தது.	எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆண்டிற்குரிய சரியான வட்டி பெறுமதியை மற்றும் கடந்த ஆண்டிற்குரிய பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வெண்டும்.
(ஆ)	2016 – 2019 காப் பகுதியனுள் அரச தனியார் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக (Public Private Partnership) தனியார் தரப்பினர்களால் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,390,636 தொகையான மானியத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.	ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக தனியார் தரப்பினர்களால் வழங்கப்பட்டிருந்த மானியத்தை கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	தனியார் தரப்பினர்களிடமிருந்து ஆராய்ச்சிக்காக கிடைக்கும் அனைத்து தொகையும் உரியவாறு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 (1) பிரிவு	உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்து ஏனும் உள்ளக கணக்காய்வை செயற்படுத்தி இருக்கவில்லை.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரினுள் உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்று இல்லாததனால் அந்த பதவியை அங்கீகரித்துக் கொள்ள உரிய ஆவணங்களை 2021 மார்ச் 05 ஆம் திகதி முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண கோவையின் நிதிப்பிரமாணம் 756	2023 மற்றும் 2024 ஆண்டுகளிற்குரிய தாக பண்டக் கணிப்பீட்டு அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணம் பிரகாரம் பண்டக கணிபீட்டு நடவடிக்கைகளை வருடாந்தம் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.
(இ)	திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2024 திசெம்பர் 30 திகதிய TO/CFM/2023/Miscellaneous இலக்க கடிதத்தின் 03 பந்தி	திறைசேரியினால் விடுவிக்கப்பட்டுள்ள போதும் எதிர்ப்பார்த்த பணிகளை இந்த ஆண்டினுள் நிறைவேற்றப்படாத அல்லது உரிய பணிகளை நிறைவேற்றியதன் பின்னர் மேலும் எஞ்சிய தொகை காணப்படின் அந்த தொகையை நிதியாண்டு முடிவடைய முன்னர் திறைசேரிக்கு அனுப்ப வேண்டிய போதும் ஆண்டினுள்	ID ஆராய்ச்சி செயற்திட்டம் மற்றும் TO ஆராய்ச்சி செயற்திட்டங்களிற்காக சபையினுள் நிறுத்தி வைத்திருந்த தொகை 2025 ஆண்டின் போது ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.	ஆண்டிற்குரியதாக கிடைக்கும் திறைசேரி மூலதன மானியம் திட்டமிட்டவாறு ஆண்டினுள் பயன்படுத்தப்பட வேண்டும்.

கிடைத்திருந்த ரூபா 57,140,147 தொகை ஆராய்ச்சி கணக்குகளுக்கு மாற்றப்பட்டு நிறுத்தி வைத்தி வைக்கப்பட்டிருந்தது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,229,543 பற்றாக்குறைவாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,998,778 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,228,321 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் ரூபா 30,373,369 இனால் அதிகரித்திருந்த போதும் மூலதன மற்றும் மீண்டெழும் மானியங்கள் ரூபா 4,782,929 இனால் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பெறுவனவு ரூபா 31,983,057 இனால் குறைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2015-2021 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட 25 செயற்திட்டங்களிற்காக பொது திறைசேரி மானியம் கூட்டுத்தொகை ரூபா 147,032,464 இனை வழங்கியிருந்ததுடன் உரிய ஆராய்ச்சி செயற்திட்டங்கள் 2016 - 2024 காலப பகுதியினுள் பூர்த்தி செய்ய வேண்டிய போதும் உரிய காலத்தை விஞ்சி 06 மாதங்களும் 40 மாதங்களுக்கிடையில் கால வீச்சளவில் தாமதமாகி 2019 இற்கும் 2024 இற்கும் இடையிலான காலத்தினுள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அந்த ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்து 03 மாதங்களினுள் இறுதி அறிக்கையை ஒப்படைக்க வேண்டியதாக செயற்திட்ட வழிகாட்டிகளில் விதிக்கப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து 01 மாதமும் 50 மாதங்களுக்கிடையிலான கால வீச்சளவு தாமதமாகியிருந்த போதும் 2025 ஏப்ரல் 30 வரை	ஆராய்ச்சி செயற்திட்டங்களை உடன்படிக்கை செய்து உரிய காலத்தில் நிறைவு செய்ய கொள்ள மற்றும் இறுதி அறிக்கையை உரிய திகதியில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் அதற்குரிய சட்டதிட்டங்களிற்கு இணங்க உரியவாறு தரப்பினரை தொடர்புபடுத்திக் கொள்ள மற்றும் பொருத்தமானவாறு தமது அதிகாரங்களை செயற்படுத்த முடியுமானவாறு நிறுவனத்தின் சட்டங்கள், கொள்கைகளை மற்றும் பணிப்பொறுப்புக்களை விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	திறைசேரி மானியம் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக திட்டமிட்டவாறு ஆராய்ச்சி செயற்திட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உரிய காலத்தினுள் பூர்த்தி செய்து கொள்வதற்கும் இறுதி அறிக்கைகளை உரிய திகதிக்கு பெற்றுக் கொள்ள முடியுமான வாறு கட்டுப்பாட்டு முறைமையை தயாரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	இறுதி அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை.		
(ஆ)	2015-2019 இடைப்பட்ட ஆண்டுளில் ஆரம்பித்து 2016-2022 ஆண்டுகளில் நிறைவு செய்ய வேண்டிய திறைசேரி மானியம் கூட்டுப் பெறுமதி ரூபா 24,547,344 ஆன 07 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் 03 செயற்திட்டங்கள் 04 ஆண்டுகளிற்கும் 07 இற்கும் இடையிலான காலம் கடந்துள்ள போதும் 2025 ஏப்ரல் மாதம் வரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. 04 செயற்திட்டங்கள் 6 மாதத்திற்கும் 18 இற்கும் இடையிலான கால வீச்சளவிலான தாமதத்தின் பின்னர் 2018 மற்றும் 2024 ஆண்டுகளில் நிறைவு செய்யப்பட்டிருந்தன.	ஆராய்ச்சி செயற்திட்டங்களை உடன்படிக்கை செய்து உரிய காலத்தில் நிறைவு செய்ய கொள்ள மற்றும் இறுதி அறிக்கையை உரிய திகதியில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் அதற்குரிய சட்டதிட்டங்களிற்கு இணங்க உரியவாறு தரப்பினரை தொடர்புபடுத்திக் கொள்ள மற்றும் பொருத்தமானவாறு தமது அதிகாரங்களை செயற்படுத்த முடியுமானவாறு நிறுவனத்தின் சட்டங்கள், கொள்கைகளை மற்றும் பணிப்பொறுப்புக்களை விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	திறைசேரி மானியத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக திட்டமிட்டவாறு ஆராய்ச்சி செயற்திட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உரிய காலத்தினுள் பூர்த்தி செய்து கொள்வதற்கும் இறுதி அறிக்கைகளை உரிய திகதிக்கு பெற்றுக் கொள்ள முடியுமான வாறு கட்டுப்பாட்டு முறைமையை தயாரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2021 ஆண்டில் ஆரம்பித்து 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் நிறைவு செய்ய வேண்டிய திறைசேரி மானியம் கூட்டுப் பெறுமதி ரூபா 39,232,100 ஆன 08 ஆராய்ச்சி செயற்திட்டங்களை உரிய திகதியில் நிறைவு செய்திருக்காததுடன் ஆராய்ச்சியை நிறைவு செய்யும் கால தாமதம் 04 மாதங்களிற்கும் 22 மாதங்களிற்கும் இடையிலானது.	ஆராய்ச்சி செயற்திட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உரிய காலத்தினுள் பூர்த்தி செய்து கொள்வதற்கும் மற்றும் இறுதி அறிக்கைகளை உரிய திகதிக்கு பெற்றுக் கொள்வதற்கும் அது தொடர்பான சட்டவிதிகளிற்கு இணங்க பொருத்தமானவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.	திறைசேரி மானியம் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக திட்டமிட்டவாறு ஆராய்ச்சி செயற்திட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உரிய காலத்தினுள் பூர்த்தி செய்து கொள்வதற்கும் இறுதி அறிக்கைகளை உரிய திகதிக்கு பெற்றுக் கொள்வதற்கும் முடியுமான வாறு கட்டுப்பாட்டு முறைமையை பேணிச்செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	2022 ஆண்டில் ஆரம்பித்து 2023 செப்டம்பர் நிறைவு செய்யப்பட வேண்டிய அமைச்சின் முன்னுரிமை மானியம் மீதான 05 ஆராய்ச்சிகளிற்காக ரூபா 12,256,290 ஆன நிதி வழங்கப்பட்டிருந்ததுடன் 11 மாதங்கள் முதல் 21 மாதங்களிற்கு	ஆராய்ச்சி செயற்திட்டங்களை உடன்படிக்கை செய்து உரிய காலத்தில் நிறைவு செய்ய கொள்ள மற்றும் இறுதி அறிக்கையை உரிய திகதியில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை	திறைசேரி மானியம் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் திட்டமிட்டவாறு ஆராய்ச்சி செயற்திட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு

	இடையிலான கால தாமதத்தின் பின்னர் 2024 மற்றும் 2025 ஆண்டுகளில் நிறைவு செய்யப்பட்டிருந்தன. அவற்றில் 02 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் இறுதி அறிக்கை கணக்காய்வு திகதிய 2025 ஏப்ரல் 22 திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. இந்த 04 செயற்திட்டங்களிற்கு கூட்டுத் தொகை ரூபா 2,383,723 ஆன எஞ்சிய தொகை பொருத்தமான முதலீடுகளில் ஈடுபடுத்தப்படாது வங்கி நடைமுறை கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.	எடுப்பதாகவும் அதற்குரிய சட்டதிட்டங்களிற்கு இணங்க உரியவாறு தரப்பினரை தொடர்புபடுத்திக் கொள்ள மற்றும் பொருத்தமானவாறு தமது அதிகாரங்களை செயற்படுத்த முடியுமானவாறு நிறுவனத்தின் சட்டங்கள், கொள்கைகளை மற்றும் பணிப்பொறுப்புக்களை விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய காலத்தினுள் பூர்த்தி செய்து கொள்வதற்கும் இறுதி அறிக்கைகளை உரிய திகதிக்கு பெற்றுக்கொள்வதற்கும் முடியுமான வாறு உரிய சட்டங்கள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எஞ்சிய செயற்திட்ட நிதியங்களை உரியவாறு முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	ஆராய்ச்சி செயற்திட்டங்களை ஆரம்பிக்க முன்னர் முன் சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் இயலுமையை இனங்காணாத காரணத்தால் ஆண்டு 2017- 2024 இடையே நிறைவு செய்யவிருந்த கூட்டுத் தொகை ரூபா 89,833,710 ஆன திறைசேரி மானியத்தை பெற்றிருந்த 12 ஆராய்ச்சிகளை நடைமுறைப்படுத்தாது இடைநிறுத்தியிருந்ததுடன் அத்தொகையும் விளைவற்று நடைமுறை கணக்குகளில் காணப்பட்டது.	ஆராய்ச்சி செயற்திட்டங்களை உடன்படிக்கை செய்து உரிய காலத்தில் நிறைவு செய்ய கொள்ள மற்றும் இறுதி அறிக்கையை உரிய திகதியில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் அதற்குரிய சட்டதிட்டங்களிற்கு இணங்க உரியவாறு தரப்பினரை தொடர்புபடுத்திக் கொள்ள மற்றும் பொருத்தமானவாறு தமது அதிகாரங்களை செயற்படுத்த முடியுமான வாறு நிறுவனத்தின் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் பணிப் பொறுப்புக்களை விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆராய்ச்சி செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆந்தைய சாத்தியப்பாட்டு ஆய்வொன்றின் மூலம் ஆராய்ச்சி நடவடிக்கைகள் செயற்படுத்துவதற்கு இயலுமை கவனத்தில்கொள்ள வேண்டும்.
(ஊ)	ஆராய்ச்சி செயற்திட்டங்களிற்கு மூலதன மானியமாக 2024 ஆண்டில் ரூபா 57,140,146 தொகை திறைசேரியிலிருந்து கிடைத்திருந்த போதும் 2025 ஏப்ரல் வரை அத்தொகையில் இலிருந்து எத்தொகையும் குறித்த பணிகளிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 2025 ஆண்டிற்காகவும் ரூபா 230,000,000 தொகை மதிப்பிடப்பட்டு நிதிஏற்பாட்டை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	மூலதன செலவினத்திற்கு இடையில், மூலதன செயற்திட்டங்களிற்காக நிறுத்தி வைத்திருந்த ரூபா 53,559,400 தொகை ID 10 செயற்திட்டங்களிற்கு மற்றும் TO 1 செயற்திட்டத்திற்காக நிறுத்திவைத்துள்ளது. இந்த தொகை 2025 ஆண்டின் போது ஆராய்ச்சியாளர்களிற்காக வழங்கப்பட்டுள்ளது.	திறைசேரியினால் கிடைக்கும் நிதியம் தொடர்புடைய ஆண்டில் உரியவாறு பயன்படுத்த வேண்டும்.

(எ)	இலங்கையில் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் அரச நிறுவனங்களிற்கு மற்றும் பல்கலைக்கழகங்களிற்கு ஆராய்ச்சி நிதியை வழங்கி மற்றும் அவற்றை முகாமைத்துவம் செய்து விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை செய்விப்பது சபையின் கடமைப்பணியான போதும் நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் பாதகமான தலைப்புகள் தொடர்பான ஆராய்சிகளின் பக்கம் ஆராய்ச்சியாளர்களை அதிகமாக ஈடுபடுத்தவும், அவற்றின் பெறுபேறுகளை பொருளாதார அபிவிருத்திக்கு செலுத்தவதற்கும் இயலுமானவாறு தேவையான நிறுவனம் மற்றும் தரப்பினரை தொடர்புபடுத்திக் கொள்ளவும் தமது அதிகாரத்தை செயற்படுத்த முடிமானவாறு சட்டரீதியான கட்டமைப்பு, சபையின் கொள்கை மற்றும் கடமைப்பணிகளை விரிவாக்கவும் முயன்றிருக்கவில்லை.	புதிய கண்டுப்பிடிப்புகள் நாட்டின் மக்களின் நலனுக்கு பயன்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆராய்ச்சி செயற்திட்டதிலும் தாக்க மதிப்பீடொன்றை (Impact Assessment) செய்வதற்கும் அவற்றின் பின்தொடர்தலை மேற்கொள்ளவும் நடவடிக்கை தற்போது ஆரம்பித்துள்ளது.	ஆராய்ச்சி விளைவுகள் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திற்கு செலுத்த முடியுமானவாறு சபையின் சட்டரீதியான கட்டமைப்புகள், கொள்கைகள் மற்றும் பணிப்பொறுப்புகளை விரிவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஏ)	TO-16-15 எனும் செயற்திட்ட ஆராய்ச்சியை 2016 திசெம்பர் 29 ஆம் திகதி ஆரம்பித்து 2021 ஏப்ரல் 28 நிறைவு செய்ய வேண்டியிருந்த போதும் 2023 ஏப்ரல் மாதம் வரை செயற்திட்டத்தின் முழுமையான செலவு ரூபா 49,896,857 தொகையை செலவிட்டு 16 மாதகால தாமதத்தின் பின்னர் நிறைவேற்றியிருந்த போதும் செயற்திட்டத்தின் நோக்கமான வறண்ட பகுதியில் குடிநீர் தேவைபாட்டை நிலைபேறான தீர்வொன்றாக இதன் விளைவாக மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கை வெற்றிகரமாக நிறைவேற்றுவதனை செய்திருக்கவில்லை.	TO 16 -15 நீரில் கறைந்துள்ள பார உலோகம் மற்றும் ப்லோரயிட்யை அகற்றி உலர் வலையத்தில் குடிநீர் பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வொன்றை வழங்கும் ஆராய்ச்சி, 2016 திசெம்பர் 29 ஆம் திகதி ஆரம்பித்து 2023 ஏப்ரல் 28 முடிவடைந்தது. இந்த செயற்திட்டத்தின் மூலம் உலர் வலையத்தில் நீர் பிரச்சினைக்கு தீர்வொன்றாக மாதிரி சமூதாய அடிப்படை நீர் சுத்திகரிப்பகமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இந்த நிலையத்தை ஊர் மக்களுக்காக நிர்மாணிக்க திட்டமிட்டிருந்துடன் தெரிவு செய்யப்பட்ட பொது இடத்தில் (நெத்தியகம வித்தியாலயம், மிஹிந்தலே) நிறுவபட்டதன்	செயற்திட்ட ஆராய்ச்சியின் விளைவுகளை சமூக நலன்புரி மற்றும் பொருளாதார அபிவிருத்திற்கு செலுத்த முடியுமானவாறு உரிய திட்டங்களை தயாரித்து செயற்படுத்த வேண்டும்.

		பின்னர் மேம்படுத்தும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டது. எனினும் பயணச் செலவினம் மற்றும் COVID 19 நிலைமை காரணமாக நீர் சுத்திகரிப்பு நிலையத்தை கண்டி ஆரம்ப கற்கை நிறுவனத்திற்கு கெண்டு சென்று அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டது. தேசிய நீர் வழங்கள் மறறும் வடிகால்மைப்பு சபையுடன் சேர்ந்து இந்த மாதிரி நீர் சுத்திகரிபு இயந்திரத்தை மிஹிந்தலே நெத்தியகம வித்தியாலயத்தினுள் மிள்நிறுவதற்காக ஆராய்சிசியாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.	
(ஐ)	2014 ஆம் ஆண்டு ஆரம்பித்து 5 ஆண்டுகளில் நிறைவு செயய்யப்பட இருந்த ஒரு செயற்திட்டம் ரூபா 49,900,000 செலவிடப்பட்டு 09 ஆண்டுகளுக்குப் பின்னர் 2023 திசெம்பர் 31 திகதி நிறைவு செய்திருந்த போதும் செயற்திட்டத்தின் நோக்கமாக இருந்த நாட்டில் பாம்பு விஷத்திற்கு மாற்று விஷமருந்தின் தேவைப்பாடு என்ற பிரச்சினையை தீர்ப்பதற்கு போதுமான பங்களிப்பை இதனூடாக வழங்குவதற்கு முடியாமலிருந்தது.	இந்த செயற்திட்டம் சுகாதார அமைச்சில் நிலவிய தேவைப்பாட்டின் மீது ஆரம்பிக்கப்பட்டள்ளது. 2025 ஆண்டின் போது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமச்சரின் தலைமைத்துவத்தின் இந்த செயற்திட்டத்தை வணிகமயமாக்குவதற்காக தற்போது 2 கூட்டங்கள் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சில் நடாத்தப்பட்டுள்ளன.	ஆராய்ச்சி விளைவுகள் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திற்கு செலுத்தப்பட முடியுமானவாறு சபையின் சட்டரீதியான கட்டமைப்புகள், கொள்கைகள் மற்றும் பணிப்பொறுப்புகளை விரிவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	ID செயற்திட்டங்கள் (Investigator Driven Projects) 04 இற்குரியதாக ரூபா 11,081,442 தொகை நிதியும், PPP (Public private partnership Program) 06 செயற்திட்டங்களிற்குரியதாக ரூபா 4,194,138 ஆன நிதியும் எஸ்பெஸ்டோஸ் செயற்திட்டத்திற்கு உரியதாக ரூபா 396,814 தொகையான நிதியுமாக கூட்டுத்தொகை ரூபா 15,672,394 தொகை குறித்த செயற்திட்டத்திற்காக பயன்படுத்தாது நடைமுறை கணக்கில் 02 ஆண்டுகளாக விளைவற்று இருந்தது.	நிதிய பயன்பாட்டை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க அதிக கவனத்தை செலுத்த நடவடிக்கை எடுப்பதென.	செயற்திட்ட நிதியத்தை உரிய செயற்திட்டத்திற்காக பயன்படுத்தி ஏதேனும் சேமிப்பு இருப்பின் அந்த தொகையை பொது திறைசேரிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.